جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்


தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

1

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ
وَالْعَجْزِ وَالْكَسَلِ وَالْبُخْلِ
وَالْجُبْنِ وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் ஹம்மி
வல் ஹஸ(ز)னி வல் அஜ்(ز)ஸி வல்கஸலி
வல் புக்லி வல் ஜுபுனி வளலஇத் தைனி
வக(غ)லபதிர் ரிஜால்

இறைவா! துக்கம், கவலை, இயலாமை, சோம்பல்,
கஞ்சத்தனம், கோழைத்தனம், கடன் சுமை,
மற்றவர்களின் அடக்குமுறை ஆகியவற்றை
விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

புகாரி 5425,6369, அபூதாவூத் 1555

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

2

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ،

وَغَلَبَةِ الْعَدُوِّ، وَشَمَاتَةِ الأَعْدَاءِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக

மின க( غ )லபதித் தைனி வக( غ )லப(த்)தில்

அதுவ்வி வஷமாத(த்)தில் அஃதாஇ

இறைவா! கடன் சுமையிலிருந்தும், எதிரிகளின்

அடக்குமுறைகளிலிருந்தும், எதிரிகளால் ஏற்படும்

மன உளைச்சலில் இருந்தும் உன்னிடம்

பாதுகாப்புத் தேடுகின்றேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள், அந்நஸாஈ 5475

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

3

اللّٰهُمَّ اكْفِنِي بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ
وَأَغْنِنِي بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

அல்லாஹும்மக்பி(ف)னீ பிஹலாலிக
அன் ஹராமிக வ அக்(غ)னினீ பிப(ف)ள்லிக
அம்மன் ஸிவாக்.

யா அல்லாஹ்! நீ விலக்கியதை விட்டும் நீ
ஆகுமாக்கியதைக் கொண்டும் எனக்கு போதுமாக்குவாயாக!
மேலும் உனது கிருபையைக் கொண்டு
உன்னை தவிர உள்ள அனைத்தை விட்டும்
என்னை தேவையற்றவனாக ஆக்குவாயாக !

திர்மிதி 3563

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

4

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ
فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا
وَفِتْنَةِ الْمَمَاتِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அதாபில் கப்ரி,
வ அஊது பிக மின் பி(ف)த்னதில் மஸீஹித் தஜ்ஜால்.
வ அஊது பிக மின் பி(ف)த்னதில் மஹ்யா வ பி(ف)த்னதில் மமாத்தி
அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் மஃசமி வல் மக்(غ)ரமி

’இறைவா! கப்ருடைய வேதனையைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். பாவங்களைவிட்டும் கடனைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’

குறிப்பு: தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆ.

**அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், புகாரி 832**

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

**5-A**

اللَّهُمَّ رَبَّ السَّمَوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ الْعَرْشِ

الْعَظِيمِ رَبَّنَا وَرَبَّ كُلِّ شَىْءٍ فَالِقَ الْحَبِّ وَالنَّوَى

وَمُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ وَالْفُرْقَانِ أَعُوذُ بِكَ مِنْ

شَرِّ كُلِّ شَىْءٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ اللَّهُمَّ أَنْتَ الأَوَّلُ

فَلَيْسَ قَبْلَكَ شَىْءٌ وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ بَعْدَكَ شَىْءٌ

وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ شَىْءٌ وَأَنْتَ الْبَاطِنُ فَلَيْسَ

دُونَكَ شَىْءٌ اقْضِ عَنَّا الدَّيْنَ وَأَغْنِنَا مِنَ الْفَقْرِ

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5254**

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

5-B

அல்லாஹும்ம ரப்பஸ் ஸமாவா(த்)தி வ ரப்பல் அர்ளி(ض) வ ரப்பல் அர்ஷில் அழீ(ظ)ம். ரப்பனா வ ரப்ப குல்லி ஷையின். பா(ف)லிக்கல் ஹப்பி வந்நவா வ முன்ஸி(ز)லத் தவ்ராத்தி வல்இன்ஜீலி வல்பு(ف)ர்கான், அஊது பிக்க மின் ஷர்ரி குல்லி ஷையின். அன்த்த ஆகிதும் பி நாஸியத்திஹ், அல்லாஹும்ம! அன்த்தல் அவ்வலு ப(ف)லைஸ கப்லக்க ஷைஉன், வ அன்த்தல் ஆகிரு; ப(ف)லைஸ பஅதக்க ஷைஉன். வ அன்த்தழ் ழா(ظ)ஹிரு, ப(ف)லைஸ ப(ف)வ்கக்க ஷைஉன், வ அன்த்தல் பாத்தினு, ப(ف)லைஸ தூனக்க ஷைஉன், இக்ளி(ض) அன்னா அத்தைன வ அக்(غ)னினா மினல் ப(ف)க்ர்

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5254

# கடன்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

5-C

இறைவா! வானங்களின் அதிபதியே! பூமியின் அதிபதியே! மகத்தான அரியணையின் அதிபதியே! எங்கள் இறைவா! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! தானிய வித்துகளையும் விதைகளையும் பிரி(த்து தாவர வர்க்கத்தை முளைப்பி)ப்பவனே! தவ்ராத், இன்ஜீல், ஃபுர்கான் (குர்ஆன்) ஆகிய வேதங்களை அருளியவனே! அனைத்துப் பொருட்களின் தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். அவற்றின் முன்நெற்றி ரோமங்களை நீயே பிடித்துள்ளாய். இறைவா! நீயே ஆரம்பமானவன், உனக்கு முன்னர் வேறெதுவும் இல்லை. நீயே இறுதியானவன், உனக்குப் பின்னர் வேறெதுவும் இல்லை. நீயே மேலானவன், உனக்கு மேலே வேறொன்றுமில்லை. நீயே அடித்தளமானவன், உனக்குக் கீழே வேறொன்றுமில்லை. எங்கள் கடன்களை நிறைவேற்றி வைப்பாயாக! வறுமையிலிருந்து காத்து எங்களைத் தன்னிறைவு கொள்ளச் செய்வாயாக!

குறிப்பு: உறங்கச் செல்லும் போது வலப் பக்கத்தில் சாய்ந்து படுத்துக்கொண்டு ஓத வேண்டிய துஆ.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5254